
# கடற்கரை கவியரங்கு எண் - 622

நாள் 05-02-2023




# வேண்டும் மனமே வேண்டும்!

வல்லமை அறிவில் வேண்டும்!
வாய்மை சொல்லில் வேண்டும்!
நிலையாமை வாழ்வு என்னும்,
நீதியை மனத்தில் கொள்வோம்!



பொறாமைத் தீயை அகற்றி,
பொய்மையை சொல்லில் நீக்கி,
அறியாமை ஆளும் மனத்தை,
அறவே நீக்கல் வேண்டும்!

இல்லாமை அறிவில் வேண்டாம்!
இனியதே சிந்தை ஆகிட,
பொல்லாங்கு மனத்தில் வேண்டாம்!
புறம்பேசும் செயலும் வேண்டாம்!




தள்ளாமை மனத்தில் நீக்கி,
தகைமையைச் செயலில் ஆக்கி,
கல்லாமை இல்லா நிலமாய்,
கனிவுடை செயலைக் கொண்டு,

செழுமையை யாவிலும் காணும்,
சீர்மிகு வடிவாய் நிறைந்து,
அறியாமை அடுத்துச் சிதற,
பேராண்மை கொண்டு வாழ்வோம்!

வேளாண்மை வாழ்வின் அறமென்று,
விருப்புடன் கொள்வோம் நாமே!
தாளாண்மைச் செயலில் கொண்டு,
தடையில்லாப் பெருமை கொள்வோம்!



கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்,
04-02-2023 (11.25 PM)